# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 மே மாதம் 26 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2015.05.12 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(□/vi (1)15/16)**

அ. i. அத்தனகல பிரதேச சபைக்கு உரிய நிட்டம்புவ திவிநெகும வாரச் சந்தை டென்டர் இடப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. அப்படியாயின் அதன் வருடாந்தப் பெறுமதி எவ்வளவு ?

ஆ. i. இங்கு 1000 ஐ விடக் கூடிய எண்ணிக்கையிலான வியாபாரிகள் வியாபாரம் செய்கின்றனர் என்பதனை அறிவீர்களா ?

ii. அவர்களிடமிருந்து டென்டர் உரிமையாளர் வாரமொன்றுக்கு எவ்வளவு நிதியை அறவிடுகின்றார் ?

iii. அதற்காக பற்றுச் சீட்டு வழங்கப்படுகின்றதா ?

இ. i. இப் பொதுப் பூமிப் பிரதேசத்தை பிரதேச சபையினால் பேணிச் செல்வதில் காணப்படும் தடை யாது ?

ii. அவ்வாறு பேணப்படாததினால் பிரதேச சபைக்கு வருடாந்தம் இல்லாமல் போகும் நிதி எவ்வளவு ?

iii. எதிர்காலத்தில் இச் சந்தைப் பிரதேசத்தை பிரதேச சபையின் மூலம் பேணிச் சென்று வியாபாரிகளுக்கு சலுகை ரீதியிலான கட்டண அறவீட்டின் கீழ் இடத்தினை வழங்குவதில் ஏதாவது தடை காணப்படுகின்றதா ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ மின்சக்தி, எரிசக்தி, மாகாண வீதி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, சமூக நலன்புரி அத்துடன் நகர மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரிடம் அமைச்சரிடம் 2015.05.12 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(□/vi (1)15/17)**

அ. கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல தேர்தல் தொகுதிக்கு உரிய பெம்முல்ல பிரதேசத்தின் பண்டார வட்டவல கிராமத்தின் மேஜர் முணிபுர குணபால மாவத்தையை அபிவிருத்தி செய்வதற்காக சென்ற அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. i. இவ் வேளையில் காப்பட் இடும் நோக்கில் அவ் வீதி கிழறப்பட்டு வீதியின் தட்டுக்கள் கழற்றப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. இதன் காரணமாக அதில் பயணத்தில் ஈடுபடும் போது பிரதேச மக்கள் பாரிய கஷ்டத்திற்கு முகங் கொடுத்துள்ளனர் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. i. 780 மீட்டர் அளவான நீளமான வீதியை காப்பட் இடுவதற்காக நிட்டம்புவ வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா ?

ii. அந் நிதி எவ்வளவு ?

ஈ. இவ் வீதியின் காப்பட்டைக் கழற்றி செப்பனிடுவது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**03.** **கௌரவ சிறீநாத் பெரேரா உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2015.05.12 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)15/18)**

அ. நீர்கொழும்பு கல்வி வலயத்தின் பிட்டிபன மஹாவித்தியாலயத்தின் பிரதான சபை மண்டபக் கட்டடத் தொகுதி பழுதுபார்க்க முடியாத படி பாழடைந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. உடனடியாக அதிலிருந்து பிள்ளைகளை அகற்றுமாறு 2012 ஆம் ஆண்டில் பிரதேச பொறியியலாளரினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இடவசதி போதாமையினால் பல வகுப்புக்களின் பிள்ளைகள் தொடர்ந்தும் அங்கு மிகவும் பாதுகாப்பு அற்ற நிலையில் கல்வி கற்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. அந்த அரைவாசி கட்டப்பட்ட நிர்மாண நடவடிக்கையும் தற்போது பாழடைகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. இந்த நிர்மாணத்தினை இடை நடுவில் நிறுத்துவதற்கும், அதனை மீண்டும் ஆரம்பிக்க முடியாமைக்குரிய காரணத்தையும் நீங்கள் தெளிவுபடுத்துவீர்களா ?

எ. இந்த நிர்மாணத்தினை விரைவாக பூர்த்தி செய்யவும் எனினும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பாக கல்வி கற்கக் கூடிய நிலைமையினை உருவாக்கவும் எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஏ. 2017 ஆசிய விளையாட்டுப் போட்டியிற்கு இணைந்த வகையில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைக்காக ரூபா 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதனை அறிவீர்களா ? அதற்கிணங்க அபிவிருத்தி நடவடிக்கை இடம்பெற்றுள்ளதா ?

ஐ. வித்தியாலயத்தின் ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதனை குறிப்பிடுவீர்களா ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு : (□/vi (1)15/19)**

அ. மேல் மாகாணத்தில் அமைந்துள்ள வலயக் கல்விக் காரியாலயங்களின் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. ஒழுங்கான மற்றும் உரிய தகைமைகளுடன் நியமிக்கப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் காணப்படும் வலயக் கல்விக் காரியாலயங்கள் எத்தனை ?

இ. விடயக் கல்விப் பணிப்பாளர்கள் எத்தனை பேர் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர் ?

ஈ. இதற்கிணங்க பதில் கடமையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எத்தனை பேர் காணப்படுகின்றனர் ? அது எந்த வலயங்களில் ?

உ. அந்த பதில் கல்வி பணிப்பாளர்களின் தகைமை என்ன என்பதை இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஊ. வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு நியமிப்பதற்குரிய தகைமை யாது ?

எ. தற்போது மாகாணத்தினுள் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் எத்தனை பேர் காணப்படுகின்றனர் ? அவர்கள் தற்போது வகிக்கும் பதவி என்ன என்பதை இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

**05.** **கௌரவ எம். ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு : (□/vi (1)15/20)**

அ. கடான, நீர் கொழும்பு பிரதேசங்களில் கழிவுகளை அகற்றும் நடவடிக்கை ஒழுங்கான முறையில் இடம்பெறுவதில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. பல வாரங்களாக இந்த திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றாததன் காரணமாக பொது மக்களுக்கு பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ள படியால் அந்த கழிவுகளை ஒழுங்கான

முறையில் அகற்றுவதற்குத் தேவையான முறை ஒன்றினை இப் பிரதேசத்தின் உள்ளூராட்சித் தாபனங்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு உங்களுக்கு ஏன் இயலாமல் போனது ?

இ. இது தொடர்பாக தெளிவான முறையொன்றினைத் தயாரிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**06.** **கௌரவ எம். ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ மின்சக்தி, எரிசக்தி, மாகாண வீதி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, சமூக நலன்புரி அத்துடன் நகர மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)15/21)**

அ. கடான பிரதேச செயலாளர் பிரிவில் உதம்விட சிறிய பாலம் வெள்ளத்தினால் உடைந்து இரண்டு வருடங்களாகுவதுடன் அச் சிறிய பாலத்தினை நிர்மாணிப்பதற்கு இவ் வேளையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

ஆ. எதன் காரணமாக இது வரையில் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை ?

இ. அப் பாலத்தினைக் கட்டி முடிப்பதற்கு எண்ணுகின்றீர்களா ?

ஈ. அப்படியானால் அப் பாலம் கட்டுவதை ஆரம்பிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு ?

உ. அதற்காக செலவாகும் நிதி எவ்வளவு ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**<u>2013 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 வது பந்திக்கு இணங்க மாகாண சபை முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2014 ஆம் ஆண்டு</u>**

"முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் - 2014" என்ற பெயர் கொண்ட ஆவணத்தில் காணப்படுவதைப் போன்று முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்தும் போது 2013 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள படியினாலும்,

அத் திருத்தங்களைத் திருத்துவதற்காக மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் சபையின் அங்கீகாரத்தின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள படியாலும்,

அவ் ஆவணத்தில் காணப்படுவதைப் போன்று, ஒவ்வொரு முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துவதை இம் மேல் மாகாண மாகாண சபை அங்கீகரிக்கின்றது.

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

மேல் மாகாணத்தில் இவ்வேளையில் பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்களிடமிருந்து இடைக்கிடையே நிதி அறவிடப்படுகின்றது, முதலாம் தரம், ஆறாம் தரம், மற்றும் பன்னிரண்டாம் தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போதும் அதேபோல், வேறு வகுப்புக்களின் தேவைகளுக்காக பிள்ளைகளிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்படுவதனால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உட்பட்டுள்ளனர் எனவே மேல் மாகாணத்தில் பாடசாலை பிள்ளைகளிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் நிதியினைச்

சேகரிப்பதை (வசதிக் கட்டணத்தைத் தவிர) நிறுத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)14/09)**

**02.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்**

"மேல் மாகாண பாடசாலைகளில் முதலாம் தரத்திற்காக பிள்ளைகளை சேர்க்கும் போது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பாதிப்புக்கு உட்படுத்தும் தற்போதைய முறையினைத் திருத்தும் தேவை தோன்றியுள்ளது. அதற்காக பிள்ளைகளை பாடசாலைக்கு ஆட்சேர்க்கும் தினம் தொடக்கம் ஒரு மாதம் நிறைவடைய முன் எல்லா வெற்றிடங்களையும் நிரப்பி நிறைவு செய்வது, பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றுபவர்களின் பிள்ளைகளின் பெயர்ப் பட்டியலை பிள்ளைகள் ஆட்சேர்க்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று வாரங்கள் நிறைவடைய முன் மாகாண சபைக்கு கிடைப்பதற்கு வழி செய்தல், அதிகாரத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் பெயர்ப் பட்டியலுக்கு இணங்க பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறையை இரத்துச் செய்தல்,

நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளுக்கு இணங்க உறுதியான ஆவணம் ஒன்றினை புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க தயாரிப்பதற்கும், பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும், இதற்கிணங்க மேல் மாகாணத்தின் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை ஒழுங்கு படுத்தி பாடசாலை ஒன்றுக்கு பிள்ளை ஒருவர் சேர்வதற்கு உள்ள மனித உரிமையை மாகாண மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது." **(பி/vi (1)14/10)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.05.13 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.